1996 ஆகஸ்ட் 6]

99--

தேக்கு மரம் வளர்க்கும் திட்டம்

968*--திரு. மு.க. ஸ்டாலின் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனத்துறையின் மூலம் தேக்கு மரம் வளர்க்கும் திட்டத்தினைக் கட்டாயமாக்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனத்துறையின் மூலம் தேக்கு மரம் வளர்க்கும் திட்டம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *திரு. அ. அசோகன்.*

திரு. அ. அசோகன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கியமான நடவடிக்கைகள் என்ன, அதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கருவேல மரங்கள் தமிழகத்தில் 13 ஆயிரம் கண்மாய்களில் 2,76,000 ஏக்டேர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளன. சுழற்சி முறையில் மேற்படி கருவேல மரங்கள் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்டப்படுகின்றன. இதன் மூலம் முந்தைய அரசு ஆண்டுக்கு 11 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் ஈட்டியது. ஆனால், இந்த ஆண்டு அதே அளவு கருவேல மரங்கள் 20 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் ஈட்டும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.